தலைப்பு 211 – அரசாங்க அச்சுத் திணைக்களம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 211 – அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்படும் விடயங்களினாலான தாக்கங்களை தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு **1** தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அரசாங்க அச்சுத் திணைக்களம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை அரசாங்க அச்சுத் திணைக்களம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை

மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே

விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i) திணைக்கள ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவின) பேரேடு		
நிதிப்பிரமாணம் 447 இன் பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவின) பேரேடு நாளதுவரையாக்கப்பட்டிருக் கவில்லை.	இதுவரை வருமானம் மற்றும் செலவினங்களை கணக்கு வைத்தல் பிரதானமாக CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றமையால் அலுவலகத்தினுள் செலவினப் பேரேடு நினைவுப் பதிவேடாக மாத்திரமே பேணிச் செல்லப்படுகின்றது என்பது.	நிதிப்பிரமாணம் 447 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் பொது 138 படிவத்தின் பிரகாரம் திணைக்களத்தின் ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவின) பேரேடு பேணப்பட வேண்டும்.

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(i)	மீளாய்வாண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்காக இலக்கம் 20-01-01-07-1409-12 எனும் தேர்தல் செலவுத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்ட ரூபா 939,089,226 தொகையான கொடுப்பனவுகள் தொடர்பாகவும் அத்துடன் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ஒவ்வொரு மாதமும் செலுத்தப்பட்ட வர்த்தக அச்சிடல் கொடுப்பனவின் கட்டமைப்பு தொடர்பான விபரங்கள் மற்றும் எண்ணிக்கை விபரங்கள் தொடர்பாகவும் மற்றும் துண்டுகளின் எண்ணிக்கை அடிப்படையிலான கொடுப்பனவுகள் தொடர்பான வேலை விபரங்கள் தொடர்பாகவும் அத்துடன் தாபனவிதிக் கேவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10.3 ஆம் பிரிவின் பிரகாரம் வார இறுதி நாட்களில் மற்றும் அரச விடுமுறை நாட்களில் வேலை செய்தமைக்காகப் பெறப்பட்ட அனுமதி மற்றும் வேலை விபரங்கள் (1/20 கொடுப்பனவு) தொடர்பாகவும் கணக்காய்வுக்குத் தேவையான நியாயமான உறுதிப்படுத்தலைப் பெற முடியாதிருந்தது.	தேர்தல் செலவுத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்ட ரூபா 939,089,226 இற்குரிய சம்பளப் பொழிப்புகள் மற்றும் உறுதிச்சீட்டுகளகள் அத்துடன் அவற்றுக்கு அடிப்படையான பிரிவுகளால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் சம்பளப் பிரிவில் கோப்பு செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவுகளுக்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் செலவுப் பத்திரங்கள் சம்பளப் பிரிவில் பேணப்படுகின்றன என்றும், கொடுப்பனவுகளைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட வருகை அறிக்கைகள், வேலை விபரப் பத்திரங்கள், நாளாந்த குறிப்புகள் உள்ளிட்ட ஆவணங்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகளில் பேணப்பட்டு வருகின்றன என்றும் அறிவிக்கப்படுகின்றது.	தேர்தல் செலவுத் தலைப்பின் கீழ் செய்யப்பட்ட செலவுகளுக்குரிய ஆவணங்கள் மற்றும் பல்வேறு கொடுப்பனவுகளைச் செலுத்தப் பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் அதற்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளகளுடன் இணைக்கப்பட வேண்டும். அத்துடன், தாபனவிதிக கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10.3 ஆம் பிரிவின் பிரகாரம் வார இறுதி நாட்களில் மற்றும் அரச விடுமுறை நாட்களில் வேலை செய்தமைக்கான (1/20 கொடுப்பனவு) முன் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பதற்கு,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரைகள்	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
CAM/D/GP/ML/ 2023, 3.2 (அ)	1997 திசெம்பர் 16 ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திர இலக்கம் 97/5232/17/035 இன்படி, 1998 ஜனவரி மாதம் முதல் திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வணிக அச்சிடல் கொடுப்பனவு செலுத்தப்பட்டு வருகின்றது. இதில், ஒரு மாதத்திற்கான வணிக அச்சிடல் கட்டளையின் பெறுமதி, நிலையான அடிப்படைத் தொகையான ரூபா 40 மில்லியன் உடன் விகிதசமமாகக் கணக்கிடப்பட்டு வணிக அச்சிடல் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. 23 வருடங்களுக்கும் மேலாகப் பழைமையான இந்த அடிப்படைப் பெறுமதியைச் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப திருத்தம் செய்யப்பட வேண்டும்.	4.4 (அ)
CAM/D/GP/ML/ 2023, 3.2 (ஆ)	வணிக அச்சிடல் கொடுப்பனவு வழங்குவதில், அமைச்சரவை முடிவில் குறிப்பிடப்பட்டிருந்த மூன்று நிபந்தனைகளான கிரயக் கணககீட்டு முறையை அறிமுகப்படுத்துதல், அச்சிடல் பணிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், மற்றும் அடையாளம் காணப்பட்ட ஒதுக்கீடுகளைக் கொண்ட ஒரு செயற்திட்டத்தை உருவாக்குதல் அல்லது அதற்கு மாற்றாக ஒரு முற்பணக் கணக்கை உருவாக்குதல் ஆகிய மூன்று நிபந்தனைகளும் 1998 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை நிறைவேற்றப்படவில்லை என்பதால் இந்த நிபந்தனைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.	4.4 (அ)
CAM/D/GP/ML/ 2023, 3.2 (ஈ)	நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2008 திசெம்பர் 02 ஆம் திகதி ஆ/8/3/706/969/21 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், திணைக்களத்தில் துண்டுக்கூலி அடிப்படையிலான கொடுப்பனவுகள் 2018 ஆம் ஆண்டிற்கு மட்டுமே நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.	4.4 (அ)

அதன் பின்னர் 2023 ஆம் ஆண்டு வரை நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி இந்த துண்டுக்கூலி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. எனவே, சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகளுக்கு நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற வேண்டும், அத்துடன், எதிர்காலத்தில் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி கொடுப்பனவுகளை வழங்கப்படக்கூடாது.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வருமானத்தின் மீதி 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாகரூபா 157,951,243 ஆக இருந்தது. இந்த நிலுவைகளில் ரூபா ஒரு மில்லியனுக்கு அதிகமாக அறவிடப்பட வேண்டிய கடன்களைக் கொண்ட 21 அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் மொத்தக் கடன் நிலுவை ரூபா 82,451,524 ஆகும். இந்த நிறுவனங்களிடமிருந்து 2024 ஆம் ஆண்டில் எவ்விதப் பணமும் அறவிடப்படவில்லை என்பதுடன் 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிலுவைத் வருமானங்களில் மீளாய்வாண்டில் ரூபா 4,219,226 மட்டுமே அறவிடப்பட்டுள்ளது. இது மொத்த நிலுவையில் 2.6 சதவீதமாகும்.	2010 – 2019 வரையான நிலுவையில் இருந்த கடன் மீதியானது 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 157,748,953 வரை குறைக்கப்பட்டுள்ளது என்பது.	நிலுவைத் தொகைகளை அறவிடுவதற்கு ஒரு துரித வேலைத்திட்டத்தை தாபித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

(ஆ)	2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி, 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து முன்கொண்டுவரப்பட்ட வருமான நிலுவைத் தொகை ரூபா 81,019,843 ஆக இருந்ததுடன், இந்த நிலுவை வருமானத் தொகையை 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் திணைக்களம் அறவிடத் தவறியுள்ளது. இந்த நிலுவைத் தொகையில் உள்ளடங்கியுள்ள, ஸ்ரீ லங்கா டெலிகொம் பி.எல்.சி. நிறுவனத்திடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த வருமானமான ரூபா 10,155,733 தொகையுடன் தொடர்புடைய கடன் நிலுவையை உறுதிப்படுத்தும் போது, அந்தக் நிறுவனத்தினால் நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களின்படி அத்தகைய பணம் எதுவும் செலுத்தப்பட வேண்டியதில்லை என்றும், திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுகள் 1989-2002 காலப்பகுதிக்குரியவை என்றும் கணக்காய்வுக்கு அறிவித்திருந்தது.	2009 ஆம் ஆண்டுக்கும் அதற்கு முந்தைய ஆண்டுகளுக்கும் உரிய ரூபா 81,019,843 ஆக இருந்த நிலுவை வருமானத் தொகையை அறவிட முயற்சி செய்யப்பட்ட போதிலும், இன்றுவரை எந்தப் பணத்தையும் அறவிட முடியவில்லை. இந்த நிலுவைகளில் உள்ளடங்கியுள்ள ஸ்ரீ லங்கா டெலிகொம் பி.எல்.சி.யிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 10,155,733 தொடர்பான ஆவணங்களை இந்தத் திணைக்களத்திலோ அல்லது அந்தக் நிறுவனத்திலோ கண்டுபிடிக்க முடியாமையால், அறவிடும் பணிகள் சிரமமாக மாறியுள்ளன.	நிலுவை வருமான மீதிகளை அறவிடுவதற்கு துரித வேலைத்திட்டத்தை ஸ்தாபித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.
(இ)	2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிலுவை வருமானமான ரூபா 559,928,948 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 96,143,723 மட்டுமே அறவிடப்பட்டது. இதனால், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாகஅறவிடப்பட வேண்டிய நிலுவைத் வருமானம் ரூபா 463,785,225 ஆக இருந்தது.	2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிலுவை வருமானம் ரூபா 559,928,948 ஆக இருந்த நிலையில், அந்தத் தொகையை 2025 மார்ச் 31 ஆம் திகதிக்குள் ரூபா 310,983,536 வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலுவையில் வருமான மீதிகளை அறவிடுவதற்காக துரித வேலைத்திட்டத்தை ஸ்தாபித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களத்தின் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக, இலக்கம் 211-01-01-2103 மற்றும் இலக்கம் 211-01-02-2103 ஆகிய செலவுத் தலைப்புகளின் கீழ் 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 351,000,000 நிதி ஏற்பாடாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக இந்த ஒதுக்கீடுகளில் 90 சதவீதம் எஞ்சியிருந்தது. மேலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தேறிய ஒதுக்கீடுகளில் 59 சதவீதம் எஞ்சியிருந்தது.	2024 ஆம் ஆண்டின் இறுதியில் கொள்வனவு கட்டளைகள் (Purchase Orders) வழங்கப்பட்டிருந்த பொருட்களின் பெறுமதி ரூபா 23,277,178 ஆக காணப்பட்டதுடன், 2024 ஆம் ஆண்டில் அந்தக் கொள்வனவுப் பொருட்கள் திணைக்களத்திற்கு வழங்கப்படாததால், 2024 ஆம் ஆண்டில் இலக்கம் 211-01-02-2103 எனும் செலவுத் தலைப்பில் நிதி ஏற்பாடுகள் மீதமாகியுள்ளன.	பெறுகைச் செயன்முறையை முறையாகத் திட்டமிட்டு, காலத்துக்குக் காலம் தேவையான பணிகளை மேற்கொள்ளக்கூடியவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.
(ஆ)	இலக்கம் 01/2023 மற்றும் 2023 ஜனவரி 27 ஆம் திகதியிடப்பட்ட வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 02.(இ) iii. பிரிவின்படி, செலவுத் தலைப்பு இலக்கம் 1003 - ஏனைய கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் குறைந்தது 6 சதவீதம் சேமிப்பாக வைத்திருக்க வேண்டும். ஆனால்,	நிதி ஒதுக்கீடுகள் எஞ்சியிருப்பதற்கான வாய்ப்புள்ள செலவினத் தலைப்புகளின் ஒதுக்கீடுகளை முகாமைத்துவம் செய்து, தேவையான நிதியைச் ஏற்பாடு செய்யுமாறு தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திலிருந்து அறிவிக்கப்பட்டதன் பேரில், நிதிப் பிரமாண இலக்கம் 66 ஊடாக ரூபா 140 மில்லியன் மேலதிகமாக,	தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும் என்பதுடன், எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகள் ஏற்படாதவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை நிறுவப்பட வேண்டும்.

	திணைக்களத்தினால் 1 சதவீதம் மட்டுமே சேமிப்பாக வைத்திருந்தது.	மேலதிக நேரச் செலவுத் தலைப்பிலிருந்து கொடுப்பனவுகள் செலவுத் தலைப்பிற்கு மாற்றப்பட்டுள்ளது.	
(இ)	திணைக்களத்தின் பதவியணிப் பயிற்சிக்காக, இலக்கம் 211-01-01-2401 மற்றும் இலக்கம் 211-01-02-2401 ஆகிய செலவினத் தலைப்புகளின் கீழ் ரூபா 4,000,000 ஆன தொகை நிதி ஏற்பாடாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக இந்த ஒதுக்கீடுகளில் ரூபா 1,579,000 இலங்கை அச்சீட்டு நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தப் பயிற்சி நெறிகளுக்கு ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவில்லை.	2024 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை அச்சீட்டு நிறுவனத்திற்கு ரூபா 1,579,000 செலுத்தப்பட்டுள்ளது. இந்த பயிற்சி நெறிகளுக்கு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவது வருடாந்தப் பயிற்சித் திட்டத்தின் கீழ் முறையாகச் செய்யப்படுகிறது.	குறிப்பிட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை அந்தப் பணிகளுக்காகவே பயன்படுத்த வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்ட பொறுப்புகள் தொடர்பான கூற்றில் பல்வேறு செலவினத் தலைப்புகளுக்கான பொறுப்புகள் குறிப்பிடப்படாததால், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பொறுப்புகள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத பெறுமதி ரூபா 75,136,621 ஆக இருந்தது.	2024 திசெம்பர் மாதத்திற்கான செலவினப் பேரேட்டில் கடப்பாடுகளாக குறிக்கப்பட்டிருந்த ரூபா 22,785,765 பெறுமதிக்குரிய உறுதிச்சீட்டுகள் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அந்த உறுதிச்சீட்டுகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக, 2024 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யும் எதிர்பார்ப்புடன் அந்தக் குறைபாடுகளைச் சரிசெய்வதற்காக அவை மீண்டும் அனுப்பப்பட்டதால்,	சம்பந்தப்பட்ட பெறுமதியை உரியவாறு பொறுப்புகள் பதிவேட்டில் உள்ளடக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	அவற்றை கடப்பாடுகளாகக் காட்டத் தவறவிடப்பட்டுள்ளது. அத்துடன், செலவினப் பேரேட்டில் கடப்பாடுகளாகக் குறிக்கப்பட்டிருந்த ரூபா 49,709,736 இற்குரிய உறுதிச்சீட்டுகள் தவறுதலாகக் பொறுப்புகள் அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை என்றும், அந்தக் தவறு எதிர்காலத்தில் திருத்திக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.	

3.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) திணைக்களத்தினால் ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட வணிக அச்சிடல் கொடுப்பனவை கணக்கிடும்போது, தேர்தல் கடமைகளையும் அதனுடன் சேர்த்து கணக்கில் எடுத்திருந்ததுடன், அந்தக் கொடுப்பனவுக்காக ரூபா 4,448,121 ஆனது தேர்தல் செலவினத் தலைப்பின் நிதி ஏற்பாடுகள் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட நிதியை, தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியின்றி, தேர்தல் செலவுத் தலைப்புடன் தொடர்பில்லாத திணைக்களத்தின் வணிக அச்சிடல் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், இந்தக் கொடுப்பனவுச் செயன்முறை தொடர்பாக நிதிப் பிரமாணங்கள்	வணிக அச்சிடல் பணிகளின் பெறுமதியைக் கணக்கிடும்போது, கவனக்குறைவாக ஆகஸ்ட் மற்றும் செப்தம்பர் மாதங்களில் வணிக அச்சிடல் பணிகளில் உள்ளடக்கப்படாத சம்பந்தமில்லாத பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும், அந்தப் பெறுமதிக்குச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. அத்துடன், தேர்தல் காலத்தில் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் பெரும்பாலான அச்சிடல் பணிகள் தேர்தலுடன் தொடர்புடையவை என்பதால், செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் அனைத்தும் தேர்தல்	சம்பந்தப்பட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு முறையான அனுமதி பெறப்பட வேண்டும். அத்துடன், கொடுப்பனவு செய்யும் செயன்முறை தொடர்பாக நிதி பிரமாணம் 136, 137, 138, 139, 145, 146, 208 மற்றும் 449(i) ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

	இலக்கம் 136, 137, 138, 139, 145, 146, 208 மற்றும் 449(i) ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	செலவுத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இத்தகைய பிழைகள் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	
(ஆ)	திணைக்களத்தினால் தேர்தலுக்காகச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளின் தொகை ரூபா 330,711,885 எனச் சான்றளிக்கப்பட்டிருந்தாலும், கணக்காய்வுக்கு வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ரூபா 1,967,811,982 ஒதுக்கீடுகளில், ரூபா 939,089,266 தொகை கொடுப்பனவுகளாகச் செலுத்தப்பட்டுள்ளது. இது தேர்தல் ஆணைக்குழு வழங்கிய நிதி ஒதுக்கீட்டின் சதவீதமாக 50 சதவீதமாகும்.	சனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடுகளில் உணவு மற்றும் நலன்புரி செலவுகளுக்காக ரூபா 35,997,700 மற்றும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய செலவுகளுக்காக ரூபா 605,956,852 செலுத்தப்பட்டுள்ளது.	வேறு செலவினத் தலைப்புகளின் ஒதுக்கீடுகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பான விபரங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் முறையாகப் பேணப்பட வேண்டும். அது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை பலப்படுத்த வேண்டும்.
(இ)	2024 ஆம் ஆண்டு தேர்தல் பணிகளுக்காகக் கொடுப்பனவு வழங்கும்போது, வாக்குச் சீட்டு அச்சிடலுக்காக ஒரு நாளுக்கு 12 மணித்தியாலங்களின் அடிப்படையிலான, அதாவது முழு நாளும் ஊழியரின் பங்களிப்பின் அடிப்படையில் வாக்குச் சீட்டு அச்சிடல் அடிப்படையில் வாக்குச் சீட்டு அச்சிடல் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதே காலப்பகுதியில், பதவிநிலை உத்தியோகத்தர்கள் வணிக அச்சிடல் பணிகளுக்காக	2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய தேர்தல் அச்சிடல் பணிகள் பொதுவாக தேர்தல் அச்சிடல் எனக் கருதப்பட்டு, தேர்தல் கொடுப்பனவு மட்டுமே வழங்கப்பட முடிவு செய்யப்பட்டு அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சம்பந்தப்பட்ட சட்ட விதிகளின் பிரகாரம் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு முறையான அனுமதி பெறப்பட வேண்டும்.

	வணிக அச்சிடல் கொடுப்பனவையும், ஏனைய ஊழியர்கள் அச்சிடல் பணிகளை நிறைவேற்றுவதற்காக துண்டுக்கூலி அடிப்படையிலான கொடுப்பனவையும் பெற்றுக் கொண்டுள்ளனர். அதன்படி, முழுநேர அடிப்படையில் ஒரே காலப்பகுதியில், ஊழியர்கள் அவர்களின் சாதாரண கடமைகளை நிறைவேற்றுவதற்காகச் சேர வேண்டிய சம்பளம், ஒரு நாளுக்கு 12 மணித்தியால பங்களிப்புடன் கூடிய வாக்குச் சீட்டு அச்சிடல் பணிகளுக்கான அச்சிடல் கொடுப்பனவு அதே காலகட்டத்தில், பதவிநிலை உத்தியோகத்தர்களால் வணிக அச்சிடல் கொடுப்பனவும், ஏனைய உத்தியோகத்தர்கள் துண்டுக்கூலி அடிப்படையிலான கொடுப்பனவும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.		
(ஈ)	2024 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்காக திணைக்களம் தேர்தல் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதற்காக கிரய மதிப்பீட்டைத் தயாரித்த போதிலும், 2024 பொதுத் தேர்தலுக்காக எந்த மதிப்பீடும் சமர்ப்பிக்கப்படவில்லை. அதன்போது, ஜனாதிபதித் தேர்தலுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டில், மூலப்பொருள், தொழிலாளர் சக்தி மற்றும் பொதுச் செலவுகள் எனக் செலவுகள் அடையாளம்	பதில் வழங்கப்படவில்லை.	திணைக்களத்திற்கு அச்சிடல் கட்டளைகள் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கிரய மதிப்பீடுகளைத் தயாரிப்பது பொருத்தமானது என்பதுடன், உண்மைச் செலவைச் சரியாக அடையாளம் கண்டு, சம்பந்தப்பட்ட செலவுத் தலைப்புகளில் கணக்கு வைக்க வேண்டும்.

	காணப்பட்டிருந்தன. காகிதம் வாங்குவதற்கும், சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்காகவும் 2024 வரவுசெலவுத் திட்டத்தில் திணைக்களத்திற்குப் போதுமான ஒதுக்கீடுகள் இருந்ததால், திணைக்களமானது தேர்தல் ஆணைக்குழுவிடம் தவறான கிரய மதிப்பீட்டைச் சமர்ப்பித்திருந்தது. அதன்படி, 2024 திசெம்பர் 12 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் DGP/IWT/2024- Parliament- 01 கொண்ட கடிதத்தின்படி, பாராளுமன்றத் தேர்தலுக்காக ரூபா 1,031,480,586 செலவிடப்பட்டிருந்தது.		
(உ)	ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தேர்தல் ஆணைக்குழுவினால் ரூபா 929,559,739 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் உணவு மற்றும் பானங்களுக்காக ரூபா 20,035,345, ஊழியர் கொடுப்பனவுகளுக்காக ரூபா 352,804,060, ஏனைய அச்சிடல் செலவுகளுக்காக ரூபா 556,720,334 கணக்கு வைக்கப்பட்டிருந்தாலும், தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு, மூலப்பொருள் மற்றும் பொதுச் செலவுகளுக்காக ஏற்பட்ட உண்மைச் செலவு எவ்வளவு என்பது அடையாளம் காணப்பட்டு, செலவுகளாகக் கணக்கு வைக்கப்படவில்லை.	ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து ரூபா 933,473,160 நிதி ஏற்பாடாகப் பெறப்பட்டுள்ளது. அதில் உணவு மற்றும் நலன்புரி செலவுகளுக்காக ரூபா 20,035,345, கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 352,804,060 தொகையும், அச்சிடல் வருமானமாக ரூபா 60,633,755 எனுமாறு மொத்த நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளமை.	உண்மையில் பொருந்தக்கூடிய செலவுக் கூறுகளை உள்ளடக்கி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். அதற்கு இணங்கச் செலவுகள் செய்யப்பட்டு, அந்தக் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்ட செலவுத் தலைப்புகளில் முறையாக கணக்கு வைக்கப்பட வேண்டும்.
(ஊ)	ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் பணிகளுக்காகத்	இரண்டு தேர்தல்களுக்கும் ஊழியர் கொடுப்பனவுகளுக்காகச்	சம்பந்தப்பட்ட சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுப்பனவுகளைப்

	திணைக்களத்தினால் CIGAS முறைமையில் உள்ளிடப்பட்டுள்ள இலக்கம் 020-1-1-7-1409 எனும் செலவினப் பேரேட்டில் மொத்தச் செலவு ரூபா 2,303,861,774 எனக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதில், ரூபா 1,077,125,609 ஊழியர் கொடுப்பனவுகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.	செலவான மொத்தத் தொகை ரூபா 605,944,358 ஆகும்.	பெறுவதற்கு முறையான அனுமதி பெறப்பட வேண்டும்.
(எ)	முகாமைத்துவக் கணக்கீட்டு எண்ணக்கருவின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட கிரயத்தினையும் உண்மையான கிரயத்தினையும் ஒப்பிடுவதற்காக விலகல் பகுப்பாய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, அதற்கேற்ப கிரயம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆனால், இத் திணைக்களம், தேர்தல் அச்சிடல் பணிகளுக்குத் தொடர்புடையதாக எந்தவொரு கிரயக் கட்டுப்பாட்டையும் மேற்கொள்ளவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	முகாமைத்துவக் கணக்கீட்டு எண்ணக்கருவின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட கிரயத்தையும் உண்மை கிரயத்தையும் ஒப்பிடுவதற்காக விலகல் பகுப்பாய்வு அறிக்கைகளைத் தயாரித்து, கிரயக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஏ)	2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல் பணிகளுக்காகச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் குறித்த மாதிரிப் பரிசோதனையின்போது, 5 நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்கள் முறையே ரூபா 2,302,300, ரூபா 1,860,263, ரூபா 2,179,748, ரூபா 1,460,548 மற்றும் ரூபா 2,421,563 ஆகிய தொகைகளைத் தேர்தல் கொடுப்பனவுகளாகப் பெற்றுள்ளனர். இந்தக்	தேர்தல் அச்சிடல் பணிகள் நடைபெறும் காலப்பகுதியில் திணைக்களத்தின் அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களும் தங்கள் வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக, வாக்குச் சீட்டு அச்சிடல் பணிகளின் மேற்பார்வை மற்றும் அதற்குத் தேவையான துணைச் சேவைகளை வழங்குவதில் ஈடுபடுத்தப்பட்டனர்.	கொடுப்பனவுகளைச் செலுத்தும்போது முறையான அனுமதி பெறப்பட வேண்டும். அத்துடன், அவர்களால் குறிப்பாக நிறைவேற்றப்பட்ட செயலாற்றுகையை அடையாளம் கண்டு கொடுப்பனவு செய்யும் ஒரு முறையை நிறுவப்பட வேண்டும்.

	கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்படவில்லை.		

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ரூபா 162,974,754 பெறுமதியான நான்கு வர்ண செங்குத்துக் வலை ஆ.ஃப்செட் அச்சிடல் இயந்திரத்தை (Four Colour Vertical Web Offset Printing Machine) கொள்வனவு செய்வதற்காக, 2024 திசெம்பர் 30 ஆம் திகதி நாணயக் கடிதங்கள் திறக்கப்பட்டன. ஆனால், அதன் பெறுமதி ரூபா 350,000,000 என அதிக மதிப்பீட்டைக் கொண்ட ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கான பணிகள் 2024 ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தின் பெறுகை நடைமுறைக்கு ஒரு முறையான கால அட்டவணை தயாரிக்கப்படாததால், 2024 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் இருந்து இந்த இயந்திரத்தை கொள்வனவு	Four Colour Vertical Web Offset Printing இயந்திரத்தை ஒரு ஐரோப்பிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் ரூபா 350 மில்லியன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. பின்னர், திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில், கொள்வனவுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, அந்த அச்சிடல் இயந்திரத்தை ரூபா 162,974,754 இற்கு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால், முந்தைய மதிப்பீட்டை விடக் குறைந்த செலவில் Four Colour Vertical Web Offset Printing இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய நேரிட்டது.	பெறுகை நடைமுறையை முறையாகத் திட்டமிட்டு, காலத்துக்குக் காலம் தேவையான பணிகளை மேற்கொள்ளக்கூடியவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

	செய்வதற்கான பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தது.		
(ஆ)	திணைக்களமானது போட்டி விலைகோரலைக் கோராமல், தேர்தல் அச்சிடல் பணிகளுக்காக உணவு மற்றும் குடிபானங்களைப் பெறுவதற்காக, திணைக்களத்தின் நலன்புரிப் பிரிவினால் நடாத்தப்படும் உணவகத்திடமிருந்து மட்டுமே விலைகளைக் கோரி, நேரடிக் ஒப்பந்தம் அடிப்படையில் விலைக்கேள்வியை வழங்குவதற்கு பெறுகைகள் குழுவால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் மூலம், தேர்தல் செலவுத் தலைப்பின் கீழ் உணவகத்திற்கு ரூபா 35,361,930 உணவு மற்றும் குடிபானங்களுக்காகச் செலுத்தப்பட்டிருந்தது. போட்டி விலைகோரலைக் கோருவதன் மூலம் குறைந்த விலையில் உணவு மற்றும் குடிபானங்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இழக்கப்பட்டது.	2024.09.12 மற்றும் 2024.10.18 ஆம் திகதிய சிரேஷ்ட பெறுகைகள் குழுவின் முடிவின்படி செயற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், தேர்தல் அச்சிடல் பணிகளுக்காக உணவு மற்றும் குடிபானங்களை வழங்குவதற்காக, திணைக்களத்தினால் தேர்தல் செலவுத் தலைப்பின் கீழ் உணவக நலன்புரிப் பிரிவுக்குப் பணம் செலுத்தப்பட்டுள்ளது.	பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(இ)	2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 221,732,549 பெறுமதியுடைய 04 கட்டளைகளுடன் தொடர்புடைய அச்சிடல் காகிதங்களைப் பயன்படுத்தும் போது, அந்தக் காகிதங்களில் நிறம் மங்குதல்,	அரசாங்க அச்சக அதிபர், அந்தக் காகிதங்கள் விவரக்குறிப்புகளுடன் இணங்குகின்றன என்று எழுத்துபூர்வமாகக் குறித்து சான்றளித்துள்ளார் என்றும், அதன்படி அச்சக அதிபரின் உத்தரவின் பேரில் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன என்றும்	இந்த விடயம் குறித்து திணைக்களத்தினால் முறையான விசாரணை நடத்தப்பட்டு, அடையாளம் காணப்பட்ட உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை

	ஒட்டிக்கொள்ளுதல், சுருங்குதல் மற்றும் இயந்திரத்தில் இலகுவாக நகர்த்த முடியாதிருத்தல் போன்ற குறைபாடுகள் கண்டறியப்பட்ட பின்னர், திணைக்களத்தால் அது குறித்துப் பரிசோதிக்க ஒரு தொழில்நுட்பக் குழு மீண்டும் நியமிக்கப்பட்டது. அந்தக் குழு, சம்பந்தப்பட்ட காகிதங்கள் நியமங்களுக்கு இணங்கவில்லை என்றும், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் போன்ற தகுதியான நிறுவனத்திடமிருந்து அதன் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்திய பின்னரே கொடுப்பனவு செய்வது பொருத்தமானது என்றும் பரிந்துரைத்திருந்தது. இருப்பினும், அவ்வாறு உறுதிப்படுத்தலைப் பெறாமல், கணக்காளர் கொடுப்பனவை நிறுத்தியிருந்த சந்தர்ப்பத்திலும், அச்சக அதிபரின் பரிந்துரை மற்றும் அனுமதியின் பேரில் தரமற்ற அந்தக் காகிதங்களுக்குச் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.	தெரிவிக்கப்படுகிறது.	அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களத்திற்குச் சொந்தமான இலக்கம் 42-8502 மற்றும் இலக்கம் 56-9718	திணைக்களத்திற்குச் சொந்தமானதும் தற்போது பாவனையிலிருந்து	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம்

கொண்ட இரண்டு வாகனங்களுக்கான வருமான அனுமதிப்பத்திரங்கள் 2019 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பெறப்படவில்லை. இந்த வாகனங்கள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செயலிழந்த நிலையிலேயே காணப்பட்டன. அதில், அந்த வாகனங்களை மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டுவர பழுதுபார்ப்பதற்கோ அல்லது அவற்றை கைத்தவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	நீக்கப்பட்டதுமான இலக்கம் 42-8502 கொண்ட லொறி வண்டியை மற்றும் இலக்கம் 56-9718 கொண்ட கெப் வண்டியை கைத்தவிர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கான தேவையான பரிந்துரைகளைப் பெறுவதற்காக மேலதிக அரசாங்க அச்சக அதிபர் (நிர்வாகம்) தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும், அந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே கைத்தவிர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.	கைத்தவிர்ப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

4.3 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) திணைக்களத்திற்குச் சொந்தமான GB-4097 இலக்க கெப் வண்டியை வெள்ளம் நிறைந்த பாதையில் செலுத்திய காரணத்தினால் அந்த வண்டிக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. அந்தச் சேதத்தைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 498,500 செலவிடப்பட்டுள்ளது. அந்தச் சேதம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை மற்றும் நிதிப்பிரமாணம் 110 இன்படி சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் அந்த விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	திணைக்களத்திற்குச் சொந்தமான GB-4097 இலக்க கெப் வண்டிக்குச் சேதம் ஏற்பட்டமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் ஒரு விசாரணைச் சபை நியமிக்கப்பட்டு விசாரணை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.	நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1998 ஜனவரியில் திகதியிடப்படாத அமைச்சரவைத் தீர்மானத்தால் கட்டளையிடப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றிய பின்னரே வணிக அச்சிடல் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும். இருப்பினும், திணைக்களமானது இன்றுவரை அந்த நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தாமல் தொடர்ந்து கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளது. அதேபோல், கொடுப்பனவுகளைக் கணக்கிடுவதற்கான அடிப்படைத் தொகை ரூபா 40 மில்லியன் என அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது 1998 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்ட தொகையாகும். 2024 ஆம் ஆண்டிற்குப் பொருந்தக்கூடியவாறு அதனை மாற்ற திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை. அதன்படி, மீளாய்வாண்டில் எந்தவொரு அனுமதியும் இல்லாமல் ரூபா 827,304,484 தொகை துண்டுக்கூலி அடிப்படையிலான கொடுப்பனவாக செலுத்தப்பட்டுள்ளது. மொத்தக் கொடுப்பனவாக	தேர்தல் அச்சிடல் பணிகள் நடைபெறும் காலப்பகுதியில், வழக்கமான தினசரி கடமைகளுக்கு மேலதிகமாக, தேர்தல் அச்சிடல் பணிகள் முடியும் வரை நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் தேர்தல் அச்சிடல் பணிகளிலும் கூடுதலாக ஏனைய வழக்கமான கடமைகளிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர். 2024 இற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களில், நிறைவேற்று மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான தேர்தல் வருமானம் வணிக அச்சிடல் சமன்பாட்டில் ரூபா 40 மில்லியன் பகுதிகளாக வணிக அச்சிடல் கொடுப்பனவாகச் சேர்க்கப்பட்டு செலுத்தப்பட்டுள்ளது. 2024 இல் நடைபெற்ற தேர்தல்களில், நிறைவேற்று மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்குப் பயன்படுத்தப்பட்ட அதே வழிமுறையைப் பின்பற்றி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.	பொதுவான அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுச் செயன்முறை ஒன்றை உடனடியாக நிறுவ வேண்டும்.

	ரூபா 1,371,937,848 செலுத்தப்பட்டுள்ளது. இது நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் அடிப்படைச் சம்பளத்தின் அதிகபட்சம் 49 மடங்கு வரையும், ஏனைய அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களின் அடிப்படைச் சம்பளத்தின் அதிகபட்சம் 67 மடங்கு வரையும் செலுத்தப்பட்டுள்ளது.		
(ஆ)	திணைக்களத்தின் அச்சிடல் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் அச்சிடல் காகிதங்கள் அதிக அளவில் திணைக்கள வளாகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. களஞ்சியப் பிரிவின் தகவல்களின்படி, மீளாய்வாண்டின் இறுதி நாளில் பல்வேறு அளவுகள் மற்றும் பல்வேறு GSM பெறுமதிகளைக் கொண்ட 94,669 உருளைகளும் 3193 தாள்களும் கையிருப்பில் இருந்தன. இருப்பினும், நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் அச்சிடல் திணைக்களத்தின் காகிதக் களஞ்சியத்தில் உள்ள பொருட்கள் குறித்த வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்படவில்லை.	இருப்புகளைச் சரிபார்த்த பின்னர் கணக்கில் வைக்கப்படும் என்றும், வருடாந்த பொருள் மெய்மையாய்வுக்கான எதிர்கால நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(இ)	நிதிப்பிரமாணம் 763 இன் பிரகாரம், அதிக அளவு பொருட்களை வைத்திருக்கும் திணைக்களங்கள் மற்றும் பொருட்களை உற்பத்தி செய்வதில் அல்லது	நிதிப்பிரமாணம் 763 இன் பிரகாரம் ஒரு களஞ்சிய ஒழுங்குவிதியை வகுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத்	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

	பழுதுபார்ப்பதில் ஈடுபடும் திணைக்களங்கள் உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டும் பொருட்டு போதுமான களஞ்சிய ஒழுங்குவிதிகளை வகுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அச்சிடல் திணைக்களம் அதற்கான களஞ்சிய ஒழுங்குவிதிகளை வகுக்கவில்லை.	தெரிவிக்கப்படுகிறது.	
(ஈ)	சேவை இலக்கம் 6590 மற்றும் 6612 ஐக் கொண்ட மேற்பார்வையாளர்களுக்கு, தினசரி உற்பத்தியில் 9 சதவீதத்தைப் துண்டுக்கூலி அடிப்படையில் கணக்கிட்டு கொடுப்பனவு வழங்க அச்சக அதிபர் மற்றும் திணைக்களத்தின் சம்பளக் குழுவின் அனுமதி கிடைத்திருந்த போதிலும், இந்த சதவீதத்தை மீறி புத்தகக் கட்டும் பிரிவின் மேற்பார்வையாளருக்கு ரூபா 1,112,814 உம், சரிபார்ப்புப் பிரிவின் மேற்பார்வையாளருக்கு ரூபா 1,035,097 உம் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது. இந்த விஞ்சிய கொடுப்பனவை சதவீதமாக கருத்திற்கொண்ட போது ஒவ்வொரு மாதமும் 9 வீதத்திலிருந்து 42 வீதம் வரை மாறுபட்ட விகிதத்தில் அதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளது.	இரகசியப் புத்தகக் கட்டும் பிரிவு மற்றும் இரகசியச் சரிபார்ப்புப் பிரிவு ஆகியன ஒரு பிரிவாக இருந்து, பின்னர் அது 02 பிரிவுகளாகக் கருதப்பட்டு 02 பணி முதன்மை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், இரகசியப் பிரிவில் உள்ள கடமைகளைக் கருத்தில் கொண்டு, சந்தர்ப்பத்திற்கேற்ப இரண்டு பிரிவுகளின் மேற்பார்வைப் பணிகளையும் இரண்டு பணி முதன்மை உத்தியோகத்தர்களும் செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதன்படி, கொடுப்பனவுகளைச் செலுத்தும்போது முதலில் இரண்டு பிரிவுகளின் மொத்தத்தில் 5 வீதமும், அதன் பின்னர் நியமிக்கப்பட்ட திணைக்களக் குழுவின் பரிந்துரையின் பேரில் அது 9 வீதமாக அதிகரிக்கப்பட்டது. மீண்டும் 2023 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்ட குழுவின் தீர்மானத்தின் பேரில், இரண்டு பிரிவுகளுக்கும்	ஒரு பொதுவான செயன்முறை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னரே கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		தலா 9 சதவீதம் எனத் தனித்தனியாகக் கொடுப்பனவுகள் கணக்கிடப்பட்டு செலுத்தப்பட்டன.	
(உ)	திணைக்கள ஊழியர்களுக்கு விற்பனை செய்வதற்காக 2023 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட பயிற்சிப் புத்தகங்களின் அளவில், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 13,789,306 பெறுமதியான 124,568 புத்தகங்கள் மீதமாக இருந்தன.	திணைக்கள ஊழியர்களுக்கு விற்பனை செய்வதற்காக அச்சிடப்பட்ட பயிற்சிப் புத்தகங்கள் இலக்கிட்டவாறு விற்பனையாகாததால் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 124,568 புத்தகங்கள் மீதமுள்ளன என்றும், அந்தத் தொகையை எதிர்காலத்தில் பிரசுர இல்லம் மூலம் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.	புத்தகங்கள் வீணாவதைத் தடுக்கவும், அவற்றின் விற்பனைக்காகவும் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில், முற்பண "பீ" கணக்கில் 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்த ரூபா 2,630,475 பெறுமதியான கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிலுவையில் உள்ள கடன் மீதியான ரூபா 2,630,475 தொகையில், ரூபா 2,599,945 அறவிடப்படாதமை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.	பழைய நிலுவைத் தொகைகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(எ)	அரசாங்கச் செலவினக் கட்டுப்பாடு தொடர்பாக 2024 ஜனவரி 10 ஆம் திகதிய இலக்கம் 01/2024 கொண்ட வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 8.2 ஆம் பிரிவின்படி, முறையான அமைச்சரவை அனுமதி மற்றும் மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டு செலவுத்	2019 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற நான்கு பேர் கொண்ட குழுவின் பரிந்துரையின் பேரில் நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் திரவப் பால் வழங்கப்பட்டுள்ளது என்றும், வழங்கப்பட வேண்டிய தொகையைத் தீர்மானிக்க ஊழியர்கள் நச்சு இரசாயனங்களுக்கு	நலன்புரி/மானியப் பணிகளுக்காகச் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின்படி செலவுத் தலைப்புகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், அத்துடன் மருத்துவப் பரிந்துரைகளையும் கருத்தில் கொள்ளப்பட

	தலைப்புகள் 1501, 1504 மற்றும் 2022 இன் கீழ் நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்ட நலன்புரி/மானியங்கள் அல்லது அபிவிருத்தி உதவித் திட்டங்களைத் தவிர, ஏனைய செலவுத் தலைப்புகளின் கீழ் உள்ள ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி நிறுவன மட்டத்தில் முடிவுகளை எடுத்து மானியத் திட்டங்களையோ அல்லது நலன்புரித் திட்டங்களையோ நடைமுறைப்படுத்தக் கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், அமைச்சரவை அனுமதியின்றி, ஒரு நலன்புரிச் செயற்பாடாக 2019 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை அனைத்து ஊழியர்களுக்கும் வெவ்வேறு அளவுகளில் திரவப் பால் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக 2024 ஜூலை மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை 1409 (ஏனைய) எனும் செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 16,915,207 தொகை செலவிடப்பட்டுள்ளது.	ஆளாகும் அளவை அடிப்படையாகக் கொண்டதாக இருந்ததென்றும் தெரிவிக்கப்படுகிறது.	வேண்டும்.
(ஏ)	தாபனவிதிக் கோவையின் முதலாம் தொகுதியின் II ஆம் அத்தியாயத்தின் 1:3 ஆம் பிரிவின்படி, ஒரு புதிய பதவியை உருவாக்கும்போது முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால்,	திணைக்களத்தின் உணவகத்தை வெளித் தரப்பினருக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கான பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும், அதன்படி உணவகத்துடன் இணைக்கப்பட்ட ஊழியர்கள் மீண்டும் அவர்களின் நிரந்தரக் கடமைப் பகுதிகளுக்கு	அவர்கள் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திணைக்களத்தின் நலன்புரிப் பிரிவினால் நடாத்தப்படும் உணவகத்திற்கு அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று இல்லை. அச்சக அதிபரின் அனுமதியின் பேரில், திணைக்களத்தின் உணவகத்திற்காக 14 வெவ்வேறு பதவிகளை உருவாக்கி, அதற்குத் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளில் நிரந்தரக் கடமையில் இருந்த 21 அச்சிடல் ஊழியர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். இந்தக் ஊழியர்கள் நிரந்தரக் கடமைகளில் ஈடுபடாத போதிலும், 2024 ஆம் ஆண்டில் தங்கள் அடிப்படைச் சம்பளத்தின் அதிகபட்சம் 67 மடங்கு வரையில் அனைத்துக் கொடுப்பனவுகளையும் பெற்றுள்ளனர்.

ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.